[12th March 1960

SRI K. SATTANATHA KARAYALAR: தவறு செய்ததாக கணக்கிட்ட போகஸ் சொஸைட்டிகள் மொத்தம் எத்தனை? இதில் சம்பந்தப்பட்ட தறிகள் மொத்தம் எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: அதற்கு கணக்குகள் கொடுக்க முடியாது. ஆனல் ஒன்றிரண்டு ஜில்லாக்களில் இந்த தவறுதல் ஏற்பட்டிருக்கிறது. அவற்றிலும் கணக்குகள் பார்த்தாய் விட்டது.

Outbreak of fire at R.S. Puram, Coimbatore

* 314 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the reasons for the outbreak of fire at R.S. Puram in Coimbatore on 9th December 1959; and

(b) the extent of damage caused and the number of persons injured thereby?

THE HON SRI M. A. MANICKAVELU: (a) The outbreak of fire is reported to be accidental. One hut caught fire from the lighted oven inside and the fire spread to other huts.

(b) Twenty-six thatched houses were gutted by fire and two tiled houses were affected. No one was injured in the fire accident. The value of loss is estimated to be Rs. 11,700 roughly.

SRI K. SATTANATHA KARAYALAR: இவர்களுக்கு உடனடியாக ரிலீப் மெஷர்ஸ் ஏதாவது செய்யப்பட்டதா? நஷ்டயீடு இவர்களுக்கு உடனடியாக கொடுக்கப்பட்டதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஆமாம். குடிசை போடுவதற்காக 30 ரூபாயும் துணிமணி வாங்குவதற்காக 10 ரூபாயும் ஆளுக்கு கொடுக்கப்பட்டது.

Buildings for the officials of the Plan Projects

* 315 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the amount of expenditure incurred on buildings for the officials of the Plan Projects such as Lower Bhavani, Vaigai, Sathanur, Krishnagiri, Araniar, Amaravathi, Periyar Hydel Projects; and

(b) the purposes for which the buildings are to be used after the execution of the projects?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b): A statement[a] containing the particulars is placed on the table of the House.

SRI N. R. THIAGARAJAN: திட்ட பிரதேசங்களில் இந்த ஸ்டேட்மெண்டில் உள்ளபடி ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டிடங்கள் கட்டப்பட்டது. எங்கள் தொகுதியில் வைகை ப்ராஜெக்ட்டில் 8 லட்சம் செலவு செய்து

[a] Printed as Appendix on pages 378–379 infra.

12th March 1960]

கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கிறது. அவைகளை நான் போய் பார்த்திருக்கிறேன். பல கட்டிடங்கள் காலியாக கிடக்கின்றன. அதை சர்க்கார் காரியங்களுக்கு உபயோகிக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா? இதுபற்றி எத்தனையோ தடவைகள் கூறியிருக்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: வைகை நீர்தேக்கத்தின் பக்கத்தில் கட்டப்பட்ட இடங்கள் சில காலியாகயிருக்கிறது. அதை செப்பனிட்டுக் கொள்ளவேண்டும். அங்கு வருகிறவர்கள் தங்குவதற்கு நல்லபடி வைக்க திட்டமிட்டு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

Panchayats

*316 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து தலைவர்களையும், உப தலைவர்களையும் இந்தியா முழுதும் ஒரே பெயரில் அழைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் நம் மாநில அரசாங்கத்தாரைக் கேட்டு இருக்கிறதா?

(ஆ) என்ன பெயரால் அழைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறது?

(இ) நம் அரசாங்கம் அதற்களித்த பதில் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The Fifth meeting of the Central Council of Local Self Government held at Hyderabad in October 1959 approved the use of certain common terms at All-India Conferences, etc., connected with Panchayats. A copy of the main recommendations and conclusions reached at the meeting has been communicated by the Government of India to all State Governments for information and necessary action.

(*b*) The Central Council has approved the use of the terms Sar-Panch and Upa-Sar-Panch to denote the President and the Vice-President of a Panchayat respectively.

(*c*) The matter is under consideration and no reply has yet been sent to Government of India.

SRI A. VEDARATHNAM: இந்த பதங்களை நம்முடைய மாநில சர்க்கார் அங்கீகாரம் செய்திருக்கிறதா? அப்படியானல் அது எப்போது அமலுக்கு வரும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: என்னுடைய விடையின் கடைசிப் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறேன்.

The matter is under consideration and no reply has yet been sent to the Government of India.

இதில் இன்னும் ஒரு முடிவு எடுக்கவில்லை.